**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 327/2025**

**Prosecution witness : அ.சா. 6 Date : 24.02.2026.**

| | |
|---|---|
| Name : நேசமணி | Taluk : |
| Father's Name : | Calling : |
| Village : | Age : |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் பொட்டனேரியில் குடியிருந்து j sw கம்பெனியில் வேலை செய்கிறேன். அ.சா1 யை எனக்கு தெரியும். பக்கத்து வீட்டை சேர்ந்தவர். எதிரியை எனக்கு தெரியும். அவர்களுக்குள் தடம் சம்மந்தமாக பிரச்சனை இருந்தது. கடந்த 30.10.2022 ம் தேதி நான் வேலையை முடித்து வீட்டிற்கு வந்த போது தனசேகர் என்பவர் வலிப்பு நோயால் கீழே விழுந்து கிடந்தார். தனசேகர் மனைவி கோமதி என்பவர் இடித்து கீழே தள்ளி கிடந்தார். எதிரி அங்கு இருந்தார். நான் சண்டை முடியும் தருவாயில் வந்து சம்பவத்தை பார்த்தேன். கோமதியை கடப்பாறையால் ராஜேஷ் என்பவர் இடித்து தள்ளி கொண்டிருந்தார். பிறகு நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) நான் ஷிப்ட் முடித்து வண்டியில் வந்து கொண்டிருந்தேனா என்றால் வந்துவிட்டேன். நான் செல்லும் போது கோமதியை கடப்பாறையால் இடித்து தள்ளிக் கொண்டிருந்ததை நான் பார்த்தேன். வேறு எதையும் நான் பார்க்கவில்லை. பிறகு நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். கடப்பாறை எங்கு வைத்திருந்தார்கள் என்ற விவரம் தெரியாது என்றால் ஆமாம். கடப்பாறையை கோமதியின் நெஞ்சுமீது இடித்து தள்ளியதில் காம்போன்டு அருகே கோமதி

கிடந்தார். காயம் ஏற்பட்டதா என்றால் அது பற்றி நான் பார்க்கவில்லை.மருத்துவமனைக்கு நான் அழைத்து செல்லவில்லை என்றால் ஆமாம்.

3) மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு சென்றார். பொதுவான தடமாகும். அது மண்பாதையாகும். அந்த பகுதியில் கால்வாய் செல்லுமா என்றால் இல்லை. இது சம்மந்தமாக எதிரி மற்றும் அ.சா.1 க்கு இடையே சிவில் வழக்கு நடந்து வருகிறதா என்றால் தற்போது தான் நடந்து வருகிறது. நான் மேற்சொன்ன சம்பவத்தை பார்க்கவில்லை என்றால் சரியல்ல. மழை தண்ணீர் அங்கி தேங்கியுள்ளது. ஆனால் அது சாக்கடை அல்ல. ராஜேஷ் என்பவர் மழை தண்ணீரை தாண்டி தான் வரவேண்டுமென்றால் ஆமாம். சம்பவத்தை நேரில் பார்க்காமல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 327/2025**

**Prosecution witness : அ.சா. 7** **Date : 24.02.2026.**

| | |
|---|---|
| **Name : ரங்கநாதன்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் பொட்டனேரியில் குடியிருந்து j sw கம்பெனியில் வேலை செய்கிறேன். அ.சா1 யை எனக்கு தெரியும். பக்கத்து வீட்டை சேர்ந்தவர். எதிரியை எனக்கு தெரியும். கடந்த 30.10.2022 ம் தேதி நான் வீட்டிலிருந்த போது சண்டை நடந்ததாக சொன்னார்கள். கோமதியை கடப்பாறையால் ராஜேஷ் என்பவர் இடித்து தள்ளி கொண்டிருந்தார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை—**

2) சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் ஆமாம். சம்பவத்தில் யார் யாரை அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் ஆமாம்.

மறுவிசாரணை இல்லை.

**ஓம்/— தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**